**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால்,

நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 யூலை 17 ஆந் திகதிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் இலக்கம் 38 1(ஈ) பந்தி | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் குறிப்பிட்ட திகதிக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டியிருந்த போதிலும், 2021 ஆம் வருடத்தின் வருடாந்த அறிக்கை 2023 ஏப்ரல் 25 வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஏப்ரல் 23 வரையில் 2021 ஆம் வருடத்தின் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு முடிவடைந்தள்ளதுடன், அதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்காக வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 880 | அரசாங்கத்தின் பணம், வருமானம், முத்திரைகள் மற்றும் சட்டப்பூர்வ ஆவணங்களை ஏற்றுக்கொள்தல் அல்லது பொறுப்பில் வைத்திருத்தல் மற்றும் நிர்வாக ரீதியாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் பிணை வைப்பு பிணை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த பணி ஏற்கனவே தொடங்கப்பட்டு, 2023/06/01 திகதியிட்ட ஆளுநர் சபை விஞ்ஞாபனத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அமைச்சின் அங்கீகாரம் கிடைத்ததும் இந்த அதிகாரிகளிடம் இருந்து பிணை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - |
| (இ) நிதிப்பிரமாணம் 1646 | நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 25 வாகனங்களின் தினசரி ஓடடல் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.2 | 2022 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் முதலீடாக நிலையான வைப்புக்களில் ரூபா 13,074,448 உம், திறைசேரி உண்டியல்களில் ரூபா | உரிய முதலீடுகளுக்கு திறைசேரியின் அங்கீகாரத்திற்காக விண்ணப்பிக்கப்பட்ட போதிலும் பதில் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - |

| | | | |
|---|---|---|---|
| ஆம் பந்தி | 14,337,709 உம் வைப்பிலிடப்பட்ட போதிலும், அதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | கிடைக்கவில்லை. மேலும், அத்தொகை ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) 2008 பெப்ரவரி 6 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | பொதுமக்களின் நலன்களை விரைவாகவும், தரமாகவும், தொடர்ச்சியாகவும் நிறைவேற்றுவதற்கான கடப்பாட்டை உருவாக்குவதற்காக நிறுவனத்தினால் சுற்றறிக்கையின் பிரகாரம் குடிமக்கள் சாசனமொன்று தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த வரைவு தொடர்பாக மேலும் கலந்துரையாடப்படடு விரைவில் இறுதி செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஊ) 2017 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனச் சட்டத்தின் 04 மற்றும்16 ஆம் பிரிவுகள் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பான அனைத்து விடயங்களிலும் ஆளுநர் சபைக்கு மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் பரிந்துரைகளை வழஙகுவதற்கு ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 6.4 மில்லியன் ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 24.9 மில்லியன் ஆக இருந்ததால் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 18.5 மில்லியன் ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு அரசின் ஒதுக்கீடுகள் மற்றும் பகுதி நேர பாடநெறிக்கட்டணங்கள் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய தொழிற்பயிற்சி தகைமைச் சான்றிதழ்களை | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2023 மே 16 ஆம் திகதி நடாத்தப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்காக,அரச செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்ற , தேசிய தொழிற்பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவை மன்றம், தொழிற்பயிற்சி அதிகார சபை அத்துடன் இலங்கை ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ள கிளிநொச்சியின் இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் போன்ற தொழிற்பயிற்சி நிறுவனங்களின் மூலம் 2 வருடங்கள் அல்லது அதற்கும் குறைவான காலத்தில் தேசிய தொழில் தகுதிச் சான்றிதழ் (NVQ 4) மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் மாத்திரமே அதற்காக 3½ முதல் 04 வருடங்கள் வரை செலவிட்டிருந்தது. எனவே, அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்பு இல்லாததால், பயிற்சி பெறுபவர்களின் நேரமும், அரச வளங்களும் வீணடிக்கப்பட்டிருந்தன. | | பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் (SLGTI) மற்றும் உத்தேச மாத்தறை தேசிய தொழிற்பயிற்சி நிலையம் ஒரே நிர்வாக அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதற்கு இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன சட்டத்தை திருத்துவதற்காக 2020 சனவரி 09 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு கிளிநொச்சியில் இயங்கி வந்த இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தை தொழிற்பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA) கையகப்படுத்திய போதிலும் சட்டத்தில் திருத்தம் | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிறுவனத்தின் திறனை அதிகரிப்பதற்கு முறையான திட்டமொன்றை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (இ) | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் பணியொன்றாக தொழில் பயிற்சி, பிராந்திய மையங்களை நிறுவுதல் மற்றும் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி பற்றிய இதழ்கள் மற்றும் பருவ இதழ்களை வெளியிடுவது ஆகியவை இருந்தபோதிலும், மீளாய்வாண்டு வரையில் அந்தப் பணிகள் நிறைவேற்றப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில், சேவையை விட்டு வெளியேறிய 03 ஊழியர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 211,707 ஆன தொகையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முன்னறிவிப்பின்றி சேவையை விட்டு வெளியேறிய அதிகாரி ஒருவரிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 196,263 தொகையை வசூலிப்பதற்கு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஏனைய இரண்டு அதிகாரிகளிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 8,444 மற்றும் வசூலிக்க வேண்டும். ரூபா 7,000 னே தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். | செலுத்தப்படாத பதவியணி கடன்கள் விரைவில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பகுதி நேர கற்கைநெறிகளுக்காக பராமரிக்கப்படும் நடைமுறைக் கணக்கில் வருடம் முழுவதும் சுமார் ரூபா 50 மில்லியன் ஆன தொகை செயலற்ற நிலையில் இருந்தது. | மேலும் நிறுவனத்தின் அபிவிருத்தி தேவைகளை மதிப்பாய்வு செய்து, அதிகப்படியான பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | பகுதி நேர அடிப்படையில் நிறுவனத்தால் பெறப்படும் பணம் பயனுள்ள நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | அத்திடிய மாணவர் விடுதிக்கான வீட்டு உபயோகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதை அவசரக் கொள்வனவாகக் கருதி விலை மனுக்கள் கோரப்படாது அமைச்சரவை அங்கீகரித்துள்ள ரூபா 50 மில்லியன் வரம்பை மீறி ரூபா 65 மில்லியன் ஒதுக்கப்பட்டு | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கைகளைக் கடைப்பிடிப்பது மற்றும் நல்ல உள்ளக கட்டுப்பாடு ஆகியவை இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டு பெறுகைகளின் கீழ் வரி உட்பட ரூபா 64 மில்லியன் கிரயத்திற்கு அரசாங்க நிறுவனத்திடமிருந்து பொருட்களை வாங்குவதற்கு 2021 திசெம்பர் 24 அன்று பொருட்கள் கட்டளை செய்யப்பட்டிருந்தன. 2022 திசெம்பர் 16 ஆம் திகதி அதாவது ஒரு வருட தாமதத்தின் பின்னர் நிறுவனத்திற்கு பொருட்கள் கிடைத்தன. | | |
| (எ) | பொரளை பிராந்திய நிலையத்திற்கு முச்சக்கரவண்டி தொழில்நுட்பவியலாளர் கற்கைநெறிக்காக முச்சக்கர வண்டிகளை கொள்வனவு செய்தமை 2020 பெப்ரவரி இல் மேற்கொள்ளப்பட்டிருந்தும், இது வரை பயிலுனர்களின் பயிற்சி தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மாணவர்களின் பயிற்சி தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | நிறுவனம் அனுபவித்து வருகின்ற மொத்தம் 29 ஏக்கர் மற்றும் 0.35029 ஹெக்டயர் ஆன காணி இலங்கை போக்குவரத்து சபை மற்றும் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமானது என்றாலும், மீளாய்வாண்டின் இறுதியில், நிறுவனத்தினால் இந்த காணிக்கான சட்டரீதியான உரிமையொன்றை இனங்கண்டு அதை கையகப்படுத்தியிருக்கவில்லை. | சட்டப்பூர்வ உரிமை இல்லாவிட்டாலும், நிறுவனம் அந்நிலத்தை அனுபவித்து வருவதால் (Substance Over Form) கணக்கீட்டு எண்ணக்கருவின்படி , வருடாந்த நிதிக்கூற்றுக்களில் அந்த நிலத்தின் மதிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், கணக்கீட்டு குறிப்பு இலக்கம் 05 இன் மூலமும் நில உரிமை பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இக்காணியின் சட்டரீதியான உரிமை இனங்காணப்பட்டு கையகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஐ) | 05 வருடங்களில் இந்த நிறுவனத்தில் முழுநேர பாடநெறிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை 3,075 இலிருந்து 4,683 ஆக அதிகரித்திருந்த போதிலும், நிறுவனத்தில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 600 ஆன எல்லைக்குள் இருந்தது. அதன் பிரகாரம் பாடநெறிகளுக்காக ஆட்சேர்ப்பு வரம்பை விட | கருத்துரை வழங்கப்படவில்லை. | மாணவர்கள் ஆட்சேர்ப்பு, பயிற்சி வகுப்புகள் நடத்துதல் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பாக பின்தொடரல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

கோரப்பட்ட வரம்பு 412 சதவீதம் முதல் 681 சதவீதம் வரை அதிகரித்த போதிலும், தேவைக்கு ஏற்ப மாணவர் ஆட்சேரப்புக்களை மேற்கொள்ளும் திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படவில்லை. அது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு

(i) ஆனமடுவ மற்றும் கிளிநொச்சி பயிற்சி நிலையங்களில் முறையே 09 மற்றும் 25 ஏக்கர் காணிகள் உள்ள போதிலும், இந்த நிலையங்களில் பாடநெறிகளை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) மீளாய்வாண்டில் பொரளை பயிற்சி நிலையத்தில் முச்சக்கரவண்டி பாடநெறிக்காக 37 பயிலுனர்களும் ஆனமடுவ பிராந்திய பயிற்சி நிலையத்தில் விவசாய இயந்திரங்கள் திருத்தும் பாடநெறிக்காக 56 பயிலுனர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 2020 ஆம் ஆண்டில் பொரளை பயிற்சி நிலையத்திற்காக முன்மொழியப்பட்ட அலுமினியம் உற்பத்தியாளர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவில்லை.

(iii) கிளிநொச்சி பயிற்சி நிலையத்தில் 192 பயிலுனர்கள் பயிற்சி நெறிகளுக்கு உள்வாங்கப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டு ஆளுநர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய உபகரணங்கள் திருத்தும் பாடநெறி ஆரம்பிக்கப்படவில்லை. இதனால், புதிய பாடப்பிரிவுகளைத் தொடங்குவதற்கு மற்றும் ெ மாணவர்களின் பங்களிப்பை அதிகரித்தல் தொடர்பான மூலோபாய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு செயல்திறனை அதிகரிப்பதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iv) மாணவர்கள் பதிவு செய்த காலத்திலிருந்து பயிற்சிக்காலம் நிறைவடைந்து அவர்களின் வேலை வாய்ப்புக்களை பெறுவது தொடர்பான தகவல் அமைபபொன்று இந்த நிறுவனத்தில் இருக்கவில்லை.

### 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊக்கத்தொகையை வழங்கும்போது அதற்கான முன்மொழிவுகளைத் தயாரித்து, நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகளின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் இருந்து செலுத்துவதற்கும் அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்குமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் , , பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் , அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கொடுப்பனவுகளை செலுத்தும் போது சுற்றறிக்கையின் படி அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

### 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்குச் சொந்தமான பணிப்பாளர்/அதிபர் உத்தியோகபூர்வ இல்லம் 2020 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படவில்லை என்றாலும், 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்புக் கட்டணமாக மொத்தம் ரூபா 2.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தற்போதுள்ள அமைப்பை சீரமைக்க வேண்டும். |

### 3.4 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) துறைசார் திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஒக்டோபர் மாதம் 25 இல் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 06 மாடிகளைக் கொண்ட அத்திடிய பகுதியில் உள்ள விடுதியின் நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை முடிக்கப்படவில்லை. | இந்நிறுவனத்தின் மாணவர்களுக்காக கட்டப்பட்ட விடுதியின் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. | எதிர்பார்த்த நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் செயற் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆகஸ்ட் 31 இல் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 03 மாடிகளைக் கொண்ட கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் (SLGTI) தங்குமிடத்தின் நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை நிறைவு பெறவில்லை. | இந்நிறுவனத்தின் மாணவர்களுக்காக கட்டப்பட்ட விடுதியின் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. | எதிர்பார்த்த நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் செயற் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன சட்ட விதிகளின்படி நிறுவனத்தில் சேவையாற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு வினைத்திறமை காண் தடைப்பரீட்சை நடாத்தப்பட்டு சம்பள உயர்வு, நியமனக் கடிதங்கள் வழங்கப்படாததுடன், ஊழியர் சேமலாப நிதியத்தின் கொடுப்பனவு வழங்கப்படாத சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுள்ளன. | இ.போ.ச ஊழியர்களுக்கு 2017 ஆகஸ்ட் 25 முதல் நடைமுறைப்படுத்துமாறு நியமனக் கடிதமொன்றை வழங்குமாறு 2018 ஆம் ஆண்டில் ஆளுநர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், சட்ட விதிகளின்படி, சேவையில் இருந்து விலகுவதற்கான | வினைத்திறமை காண் தடைப்பரீட்சை நடாத்தப்பட்டு சம்பள உயர்வு, நியமனக் கடிதங்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் , நியமனக் கடிதம் வழங்குவதில் ஊழியர் தரப்பிலிருந்து ஆட்சேபனை இருந்ததால், நியமனக் கடிதங்களை வழங்குவகற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | நிறுவனத்தில் வெற்றிடமாக உள்ள ஐந்து பிரதான பதவிகளுக்கான கல்வித் தகைமைகளுக்கு சமமான சம்பள விகிதங்களைத் தயாரித்து அது தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி, அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் ஊழியர் பணியிடங்களை மறுசீரமைக்கும் போது சம்பள உயர்வு தொடர்பாக ஏற்படுகின்ற சிக்கல் சூழ்நிலைகளை திறைசேரியுடன் கலந்துரையாடி சரிசெய்வதற்கும் 2019 மே 23 இல் நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான கணக்குக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் 2022 திசெம்பர் வரை செயல்படுத்தப்படவில்லை. மேலும், 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை அப்பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. அதுமட்டுமல்லாமல், கிளிநொச்சியில் உள்ள ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் 2022 திசெம்பர் 31 வரை கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் 61 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வரிசை அமைச்சின் கீழ் இயங்கும் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்களின் கல்வி ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழு இதில் கலந்து கொண்டு தற்போதுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியுள்ளது. | பொது முயற்சிகளுக்கான கணக்குக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தின் பணிப்பாளர்/அதிபர் பதவிக்கு, 2020 பெப்ரவரி முதல் ஆளுநர் சபை உறுப்பினர் ஒருவர் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 2 மில்லியன் கொடுப்பனவொன்று வழங்கப்பட்டது. கனிஷ்ட முகாமைத்துவ நிலைப் பதவியில் இருந்த அதிகாரியொருவர் பிரதி | ஆட்சேர்ப்பு செய்வதில் உள்ள சிரமங்கள் காரணமாக, 2020.02.18. முதல் அமுலுக்கு வரும் வகையில், 2017 இன் 15 ஆம் இலக்க இ.ஜே.தொ.ப. நிறுவனச் சட்டத்தின் பிரிவுகள் 17 (1) மற்றும் 17 (5) இன் படி பணிப்பாளர்-அதிபர் பதவிக்கு நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை அதன் பணிகளைச் | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர்/ பிரதி அதிபர் பதவிகளுக்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை கடமை மேவுகை அடிப்படையில் நியமிக்கப்பட்டு சம்பளம் மற்றும் நிலுவை சம்பளத் தொகையாக ரூபா 1.8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | செய்வதற்காக வரிசை அமைச்சின் செயலாளரின் இலக்கம் ADM/01/10/05/15 மற்றும் 2020.02.09 ஆம் திகதிய கடிதம் மூலம் பணிப்பாளர்-அதிபர் பதவிக்கான பணிகளைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தின் இரண்டாம் பந்தியின்படி மாதாந்தம் ரூபா 61,000 கொடுப்பனவொன்று செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஈ) | முகாமைத்துவம்- மனித வளம் என்ற பதவியை வகிக்கும் ஒரு அதிகாரி, நிறுவனத்தில் ஏற்பட்ட சிக்கல் சூழ்நிலை காரணமாக ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் ஒரு பிராந்திய நிலையத்தில் நிர்வாகப் பணிக்காகப் பணியமர்த்தப்பட்டதுடன் அதிகாரியின் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் செயலாற்றல் ஒன்று இல்லாதபோதிலும் மீளாய்வாண்டில் ரூபா 935,800 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது. | ஆளுநர் சபையின் அறிவுறுத்தலின்படி, நிறுவனத்தின் தொழில்துறை அமைதியைப் பேணுவதற்கு அவர் இடையூறாக இருந்ததால் குறித்த அதிகாரி பொரளை பிராந்திய நிலையத்திற்கு இணைக்கப்பட்டு ஆளுநர் சபையின் அறிவுறுத்தலின்படி மீண்டும் இந்நிறுவனத்திற்கு அழைக்கப்பட்டார். | உள்ளகக் கட்டப்பாட்டு முறைமை நிறுவப்பட வேண்டும். |